# படைக்கு ஆட்சேர்ப்பதில் பாதுகாப்பு அமைச்சு தீவிர முயற்சி!

(கொழும்பு)
விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு இராணுவத்துக்கு ஒருலட்சம் சிப்பாய்களும். 5 ஆயிரம் அதிகாரிகளும் தேவை என்பதனால் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதில பாதுகாப்பு அமைச்சு முக்கிய

(6ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5. 00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 27 இதழ் 126
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10 - 6 - 1995


## புலிகளின் மிதிவெடியில் 3 இராணுவம் காலிழப்பு

[யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்குண்ட மூன்று இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர்.
மட்டக்களப்பு 4ம் கட்டையில் நேற்று முன்தினம் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த

(6ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தலைவர் அனுதாபச் செய்தி

(கொழும்பு)
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 'சீ-டான்சர்' கப்பல் கடல் கண்ணிவெடியில் சிக்கி சேதமடைந்ததையிட்டு தாம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிப்பதாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் சர்வதேச செஞ்

(6ம் பக்கம் பார்க்க)

★ தலைநகரில் மீண்டும் பதற்றம்

# கொழும்பில் பயணிகள் பஸ்ஸில் நேற்று மாலை குண்டு வெடிப்பு!

## நால்வர் படுகாயம்; பஸ் சேதம்

[கொழும்பு]
**கொழும்பு நகரில் நேற்றுமாலை அனுராதபுரம் செல்லவிருந்த பயணிகள் பஸ் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில்' இரு பெண்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர். பஸ் பலத்த சேதமடைந்தது. இச்சம்பவத்தையடுத்து நகரில் பெரும் பதற்றம் நிலவியது.**

நேற்று மாலை 5.20 மணியளவில் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் அனுராதபுரம் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த பஸ் வண்டியில் திடீரென குண்டு வெடித்தது: இக்குண்டு வெடிப்பினால் பஸ்வண்டிக்குள் இருந்த இரு பெண்கள் உட்பட நால்வர்படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பஸ்ஸில் பயணிகள் தொகை குறைவாக இருந்தமையால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்த சமயம் புறக்கோட்டைப்

[6ம் பக்கம் பார்க்க]

அக்கரைப்பற்றில்

## சப். இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை!

(மட்டுநகர்]
அக்கரைப்பற்றில்விடுமுறையில் வீட்டுக்கு வந்த றிசேர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார்.

தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் றிசேர்வ் சப்-இன்ஸ்பெக்டர் மு. ரவிதாஸ் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். இவர் திருமணம் செய்வதற்காக வீடு வந்திருந்தார்.

சம்பவதினம் தனது வீட்டில் இருந்தபோது இரு இளைஞர்கள் வந்து வெளியே அழைத்துச் சென்றனராம். மறுநாள் புதன்கிழமை காலை இவரின் சடலம் அக்கரைப்பற்றுபெரிய குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

ரி

## படை முகாமில் உணவுநிலை மோசம் பெருமளவு சிப்பாய்கள் விரக்தி!

(கொழும்பு)
வடபகுதி இராணுவமுகாம்களில் நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கிறது. புதிய உணவு வகைகள் படையினருக்கு இல்லை. இதே நிலைமையில் எவ்வளவு காலத்துக்குத்தான் தொடரமுடியும்: இவ்வாறு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதவேளை வடக்கில் இராணுவ முகாம்களில் உணவுப் பொருட்கள் பற்றாக்குறையாகும்வரை தங்கள் தாக்குதலை தொடுப்பதற்கு புலிகள் காத்திருக்கிறார்கள் போல் தெரிகிறது என்று இராணுவத்துறை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமது முகாம்களைச் சூழ புலி

(6ம் பக்கம் பார்க்க)

## உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு எதுவித தட்டுப்பாடும் கிடையாது என்றும் மக்கள் பாவனைக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் தாராளமாக இருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களான மா. சீனி, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் வழமைபோல் வழங்கபடுமென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. -162-ரி

## வடபகுதி இராணுவத் தாக்குதலுக்கு அனுராதபுரத்தில் முன்னேற்பாடு

(கொழும்பு]
வடபகுதியில மேற்கொள்ளவுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைக்கான ஆயத்த நிகழ்வுகள் அனுராதபுரத்தில் திட்டமிடப்பட்டு வருவதாக இராணுவ புலனாய்வு செய்திகள் தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கை திட்டமிடல் தளபதி மேஜர் ஜெனரல் ரொகான் தளுவத்தை தலைமையில் சிரேஷ்ட இராணுவ உயர் தளபதிகள் இது சம்பந்தமான முன்னேற்பாட்டு நிகழ்வுகளை தயாரிப்பதில முழுமூச்சுடன் ஈடுபட்டு வருவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

[6-ம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு நடவடிக்கையால் கொழும்பு வாழ்க்கை குழப்பம்!

(லண்டன்)
புலிப்படையினரின் தாக்குதல்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் கொழும்பு வாழ்க்கையை ஏற்கனவே குழப்பியுள்ளது என்று பி பி ஸி. தெரிவித்தது.

(6-ம பக்கம் பார்க்க)

சூட்டுக் காயங்களுடன்

## தமிழ் இளைஞர் சடலம் வாவியில் மீட்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லைப் பிரதேசத்திலுள்ள வாவி ஒன்றில் மிதந்து வந்த தமிழ் இளைஞரின் சடலமொன்றை பொலிசார் மீட்டுள்ளனர்,

சடலத்தில் பல துப்பாக்கிச்

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்திய அமைச்சரவையில் மாற்றம் புதியவர்கள் இன்றுபதவிஏற்பு

(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும், புதிய அமைச்சர்கள் இன்று மாலை பதவியேற்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது வெளிநாடு சென்றுள்ள ஜனதிபதி சங்கர் தயாள் சர்மா இன்று மாலை

(6ம் பக்கம் பார்க்க)

# வீடுகட்ட 8,000 ரூபா மானியம்; யாழ். மாவட்டத்தில் 119 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வருமானம் குறைந்த கிராமப்புற மக்களின் நன்மை கருதி, அவர்கள் வீடுகளை அமைப்பதற்கு மானியம் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி உள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் சு. மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: கிராமப்புறங்களில் வாழும் 700 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறும் வறிய மக்களுக்கே இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

வீடு ஒன்றை அமைப்பதற்கு மானியமாக 8,000 ரூபா இவர்களுக்கு வழங்கப்படுகிறது யாழ் மாவட்டத்தில் உள்ள 10 பிரதேசச் செயலர் பிரிவுகளில் மொத்தம் 119 பேர் இம்மானியம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தெரிவு செய்யப்பட்ட இவர்களுக்கு முதல் கட்டக் கொடுப்பனவாகத் தலா 3,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நகரசபை மற்றும் பட்டினசபைப் பகுதிகளில் வாழும் 1,000 ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறுவோருக்கும் இத்திட்டத்தின் கீழ் ஒரு வீடு அமைப்பதற்கு 10,000 ரூபா மானியமாக வழங்கப்பட்டு வருகிறது என்றார். 162 கி சி

## மருந்துகள் வந்துள்ளன.

(நெல்லியடி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு, தடுப்பு ஊசி மருந்துகளும் போலியோ மருந்து வகைகளும் அண்மையில் வந்துசேர்ந்துள்ளன. (160)

## வட்டச் செயலகம் இடமாற்றம்

(நெல்லியடி)

பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கி வந்த பருத்தித்துறை வட்டச்செயலகம் கடந்த 3ம் திகதி முதல் மாலுசந்தியிலுள்ள கோட்டச் செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. -160

## மகோற்சவம்

[சாவகச்சேரி]

மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த 3ம்திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை 11ம் திகதி தேர்த்திருவிழாவும் 12ம்திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. .155

## பழைய மாணவர் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் செயற்குழு தெரிவும், ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. ம குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும்.

# ஆலயங்கள் படை முகாம்களாக மாற்றப்படுவதை அனுமதிக்கக்கூடாது

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்கள் அனைத்தும பண்டைக்காலம் போல் அறச்சாலைகளாக மாறவேண்டும். இவ்வாலயங்களை நிர்வகிப்போர் அறங்காவலர்களாகத் திகழ வேண்டும். இதனை நடைமுறைக்குக் கொண்டுவர நாமனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேணடும்.

இவ்வாறு இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீபன், சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள இந்து அமைப்புகள் கலந்து கொண் கூட்டத்திலும் இந்து சமயப்பேரவை எதிர்வரும் 15-ம் திகதி நடாத்தவுள்ள கண்டனனப்பேரணி பற்றி விளக்கமளித்தும் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், தர்மத்தைக் காக்கும் பொறுப்பு அறங்காவலர்களைச் சார்ந்தது. இவர்கள் அதர்மத்தைத் துணிந்து எதிர்க்கும் வல்லமையுள்ளவர்களாகத் திகழ வேண்டும்.

தர்மம் ஜெயிக்க வேண்டுமானல் அதர்மம் அழிக்கப்பட வேண்டும்.

இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதையும் அவை இராணுவ முகாம்களாக மாற்றப்படுவதையும் இந்துக்கள் ஒருபோதும்அனுமதிக்க கூடாது. நாம் அனைவரும் எதிர்வரும் 15.ம் திகதி அரசின் இந்து மத அழிப்பு நடவடிக்கைக்கு எதிராக அணிதிரண்டால் உலகம் ஒரு கணம் சிந்திக்கும். பொருளாதார போக்குவரத்து தடைகளை விதித்துள்ள அரசாங்கம் வழிபாட்டிற்கு தடைகளை விதித்துவருவதன் மூலம் மனித உரிமைகளை மீறுவதை ஆத்மீக தலைவர்களும் எதிர்க்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதை தெரிவுபடுத்துவோம் என்றார். -சி

## தேர்த் திருவிழா

(அரியாலை)

தொல்புரம் கொட்டியம்பதி அருள் மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோவில் தேர்த் திருவிழா எதிர்வரும் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது அன்றைய தினம் மாலை 3.00மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளது. 59

## ஒத்திவைப்பு

]யாழ்ப்பாணம்[

19ந் திகதி திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருந்த கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான இரண்டாம் பயிற்சி நெறி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதென்பதை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் [வ.கி) தெரிவிக்கின்றார்.

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ் இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றததுடன ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 26 ம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 27 ம் திகதி செவ்வாய் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். -154

# “அதிபர்கள் கற்பித்தலில் முதன்மை ஆசிரியராக கடமையாற்றவேண்டும்”

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

[உடுவில்]

பாடசாலை அதிபர்களே வகுப்பறை கற்பித்தலில் முதன்மை ஆசிரியர் போன்று கடமையாற்ற வேண்டும். 90 வீதமான பாடசாலை அதிபர்கள் வகுப்பறை கற்பித்தலில் ஈடுபடுவதில்லை என தெரியவருகிறது. இதுவருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமானதாகும்’’

உடுவில் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா இவ்வாறு தெரிவித்தார்.

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினர்.

அதிபர்கள் பாடசாலை நிர்வாகத்துடன் மட்டும் நில்லாமல் வகுப்பறை கற்பித்தலில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கவேண்டும்.

மாணவர்களின் நலன்களுக்காக நடத்தப்படுகின்ற போட்டிகளில் தமது சுய நலனுக்காக கலந்து கொள்ளாது விடும் எந்த ஒரு அதிபரோ அல்லது ஆசிரியரோ வரலாற்றுத்தவறு இழைத்தவராகின்றனர்.

எனவே அதிபர்களுக்கு தரப்பட்ட அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றுக்குட்பட்டு நல்ல முறையில் நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். 109-ரி

# பல்வேறு குற்றச்செயல்கள்; காவல்துறையால் பலர்கைது

(உடுவில்)

கோஷ்டி மோதல், கைகலப்பு கத்திவெட்டு, கசிப்புத் தயாரித்தல் போன்ற பல்வேறு குற்றச் செயல்கள் புரிந்த பலர் கடந்த வாரம் சுன்னாகம் காவல்துறையினரால கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

ஈவினை வடக்கு பகுதியில் இருநபர்களுககிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் தாக்கப்பட்டதுடன் அவரது சைக்கிளும் சேதமாக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஏழாலை தெற்கு மயிலங்காடு என்ற இடத்தில் குடும்ப விவகாரம் சம்பந்தப்பட்ட வாக்கு வாதத்தின் போது கத்தியால் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இச்சம்பவத்தின் போது ஒருவா கத்திவெட்டுக்கிலககாகி காயமடைந்தார்.

புன்னாலைக் கட்டுவனில் பதினாறு போத்தல் கசிப்பு வைத்திருந்த நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

கோண்டாவில் வடக்கில் கசிப்பு விற்ற ஒருவர் விற்றுக் கொண்டிருந்த நிலையில் ஒரு போததல கசிப்புடன் கைது செய்யப்பட்டார். 109-சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–06–10**

சனி இரவு

08-02 புரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 சிறப்பு நிகழ்ச்சி - 2ம் கட்ட ஈழப் போர்

**1995–06–11**

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07 30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–06-10**

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிக் கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விநாடி வினாப் போட்டி
06-00 சிநதனைக்குச் சில விநாடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்


கோண்டாவில் தில்லையம்பதியில்

(இன்று) சப்பறத் திருவிழா

சேவடி தொழுவோம்
அம்மா சிவகாமி

ராகம்: காபி தாளம்: ஆதி
பல்லவி
சேவடி தொழுதோம் அம்மா சிவகாமி
பூவடிப் பாதமே புகலிடமாய மைந்தோம்
சேவடி தொழுதோம் அம்மா சிவகாமி
பூவடிப் பாதமே புகலிடமாய மைந்தோம்
ஆக்கம்;
கவிமாமணி ந. வீரமணிஐயர்



இரவு 7-30 மணி:
அகல் யாவும் குளத்து நீரும்
என்னும் பொருள் பற்றி
சிவநெறித் தொண்டன்
செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)
சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்
(ஏ-4971)


# சுகாதார பரிசோதகர் பயிற்சி இங்கு நடத்தலாம்

(கொழும்புத்துறை)

பொது சுகாதார பரிசோதகர்களுக்கு யாழ் பிரதேச பயிற்சி நிலையத்தில பயிற்சி வழங்குவதற்குத் தேவையான வசதிகள் இருப்பதாக யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் நிலவர அறிக்கை ஒன்றைத் தயாரித்து அண்மையில் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது.

பொது சுகாதாரப் பரிசோதகர் பயிற்சிக்கு வடபகுதியிலிருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு தென்பகுதியில் விரிவுரைகள் சிங்களத்தில் இடம் பெறுவதால் அங்கு செல்லப் பின்னடிக்கின்றனர்.

அதனைக் கொழும்பு சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இதற்கான பயிற்சியை வழஙகுவதற்கு இணக்கம் தெரிவித்து பயிற்சியை இங்கு நடத்துவதற்காக பயிற்சி நிலையத்தின் நிலவர அறிக்கையை யாழ் பிராந்திய சுகாகாரத் திணைக்களத்திடம் கோரியிருந்தது. 154 - சி

## கந்தபுராண படன பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர்கோவிலில் கந்த புராண படனப் பூர்த்தி விழா நாளை 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 8.00 மணி முதல் நடைபெறும் விசேட அபிஷேகம், பூசை வள்ளியம்மைதிருக்கல்யாணப் படிப்பு என்பன நடைபெறும்.

## சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

இராமநாதன் இசைக் கல்லூரியில் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தி அடைந்து

[6ம் பக்கம் பார்க்க]

மணிவாக்கு

உங்கள் மௌனத்தைப்புரிந்து கொள்ள முடியாதவரால் உங்கள்பேச்சையும் புரிந்து கொள்ளமுடியாது.

எல்பர்ட் ஹப்பர்ட்

## நமது நோக்கு

### ரத்வத்தையின் ஆசை

கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான அணி சிங்களமக்கள்மத்தியிலும் தற்போதைய முன்னுள் படையினர் மத்தியிலும் வலுவடைகிறது.

அவர் முக்கிய அமைச்சுக்களான சக்தி மற்றும் மின்சாரத்தைத் தம்வசம் வைத்திருப்பதால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று முன்னுள் முப்படைத் தளபதிகளும் முன்னுள் பொலிஸ் மா அதிபரும் தம்எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் சிறிலங்கா படையினர் மத்தியிலும் ரத்வத்தைக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. வடக்கு கிழக்குப் படை எடுப்புகளில் தனக்குச்சாதகமான அனுபவமற்றவர்களை பொறுப்பாக நியமித்ததும் வட கிழக்கு பகுதிகள் பற்றி பரிச்சயமுள்ள தளபதிகளை ஒதுக்கியதும் படையினரின் நலன்களை கருத்தில் கொள்ளாது பாரிய உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை திட்டமிட்டமையும், உதாரணத்துக்கு ஆருயிரம் சிப்பாய்களுடன் சென்று யாழ்ப்பாணத்தை கைப்பற்றும்படி கேட்டதும் படையினர் மத்தியில் ரத்வத்தைக்கு எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் வடக்கில் பாரிய நடவடிக்கை ஒன்றை நடத்தி பெரியதொரு கௌரவத்தை படையினரின் அழிவின் மத்தியில் பெற விரும்புகிறுர் என்று படையினர் கருதுகின்றனர்.

ரத்வத்தைக்கு எதிரான எதிர்ப்பு முன்னுள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலகா தொலைக்காட்சியில் பகிரங்க விவாதம் ஒன்றை நடத்தி மக்களுக்கு தம் இருவரது கருத்துக்களை தெரிவிப்பதற்கு தான் தயார் என்று சவால் விடும் அளவிற்குப் போயுள்ளது.

ஜே. ஆர். காலத்தில் பீப்பாக்குண்டுகளை மழைபோல் பொழிந்த அத்துலத்முதலியும் பிரேமதாசா காலத்தில் ரஞ்சன் விஜேயரத்ஞவும் யாழ்ப்பாணத்தை பிடிப்பதற்கு பல பிரயத்தனங்களைச் செய்தனர். அவர்களைப் போல் ரத்வத்தையும் சிறுபிள்ளைத்தனமாக முயற்சி செய்வது வியப்புக்குரிய விடயமல்லவேயாயினும் அதை அவர் சிங்கள இளைஞர்களின் உயிர்களைப் பணயம் வைத்து செய்ய எத்தனிப்பது அவரின் சுயநலத்தையே எடுத்துக்காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதென்றுல் தமிழ் மக்கள் சும்மா கைக்கட்டிக்கொண்டு நிற்கவா போகிறுர்கள் சமயம் வரும்போது எமது இளைஞர்கள் தாய் மண்ணுக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள். விடுதலைப் புலிகளின் அறைகூவலை ஏற்று தாய் மண்ணை மீட்கும் மண்மீட்புபோரில் இளைஞர்களும் இளம் பெண்களும் இணைந்து கொள்வார்கள் என்பது திண்ணம்.

# அடங்கிப்போகும் நிலைப்பாட்டை அரசு கடைப்பிடிக்கமாட்டாது

## — அமைச்சர் கதிர்காமர்

(லண்டன்)

இலங்கையில் தீவிரமடைந்து வரும் போரையடுத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வை எட்டவும், இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் எப்போதும் தயாராக உள்ளது.

லண்டனில் உள்ள சர்வதேச விவகாரங்களின் நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் மட்டுமே பிரச்னைகளுக்குத் தீர்வாகாது என்பதைப் புலிகள் உணர்ந்துள்ளனர் என்ற நம்பிக்கையுடன் இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் தற்போதைய சூழ்நிலையில், அரசாங்கம் ஒரு தீர்வை ஏற்படுத்த முடியாத நிலையிலுள்ளது. அத்துடன் இலங்கை அரசு அடங்கிப் போகும் நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

போர் நிறுத்த முறிவுக்குப் பின்னர் புலிகள் ஏவுகணைகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இது இலங்கை -இந்தியப் பாதுகாப்புக்கு எச்சரிக்கை விடுப்பதாக உள்ளது என்றும் அமைச்சர் கதிர்காமர் மேலும் அங்கு குறிப்பிட்டார். கே சி

# அவசரகாலச் சட்ட நிலைமை கட்டுநாயக்காவுக்கும் விஸ்தரிப்பு

(கொழும்பு)

அவசரகால நிலைமையை, கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் உள்ளிட்ட சகல பிரதேசங்களுக்கும் அரசு விஸ்தரித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பு நகருக்கும் மாத்திரமே இதுவரை அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கடந்த 5ம் திகதி, வான் ஒன்றில் குண்டு வெடித்ததை அடுத்து அப்பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவதும் தெரிந்ததே.

கொழும்பு நகரிலிருந்து 35 மைல் தொலைவிலுள்ள கட்டுநாயக்கா பிரதேசத்திற்கும் அவசரகால நிலைமை விஸ்தரிப்புப் பிரகடனம் நேற்று முதல் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. கே சி

# வெளிநாட்டு நிதி உதவியில் இலங்கை ஆயுதக்கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு இவ்வருடம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பல கோடி ரூபா பணத்தை, இராணுவத் தளபாடங்கள் வாங்குவதற்கே அரசு செலவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இதுபற்றி பி.பி.ஸி. மேலும் தெரிவிக்கையில்: இலங்கை இராணுவ அதிகாரிகள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் நவீன ரக ஹெலிகொப்டர்கள், யுத்த விமானங்கள், கவச வாகனங்கள், கடற்படைக்குத் தேவையான கப்பல்கள் ஆகியவற்றை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உலக இராணுவச் சந்தையில் கொள்வனவு செய்யப்படும் இந்த இராணுவச் சாதனங்கள் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளன என்றும் தெரிவித்தது. வி சி

## தற்போதைய கெடுபிடிகள்

# தேசிய நீரோட்டத்திலிருந்து தமிழரை வெளியேற்றிவிடும்

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது தற்பொழுது மேற்கொள்ளப்படும் பாதுகாப்புக்கெடுபிடிகள் அவர்களை தேசிய நீரோட்டத்திலிருந்து வெளியேற்றிவிடும் என அரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'தினகரன்' பத்திரிகை தனது ஆசிரியதலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

பயிரை மேயும் வேலிகள்' என்ற தலைப்பில் தினகரனின் நேற்றைய ஆசிரிய தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது. அதிலேயே இந்த விவரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

தமிழர் என்றுல் அவர்களைப் புலிகளாகப் பார்ப்போர் ஒரு புறம் அதைப் போர்வையாகப்பயன்படுத்தி தமிழர்களைக் கறப்போர் மறுபுறம். மோதல்தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்கள் இவ்வாறு பல துயரங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. மக்களின் பாதுகாப்பை ஏலம்போடுபவர்களைப் பற்றி கவனமாக இருக்கவேண்டும். எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி-சி

# புத்திஜீவிகள் வெளியேற்றத்தால் கல்வித் தரத்திலும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டுப் போரினுல் புத்திஜீவிகளில் பெரும்பாலானேர் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறியமையால் இலங்கையின் கல்வித்தரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்கள் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; வளர்ந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் கல்வித்தரம் முன்னர் வெளிநாடவர்களால் மதிக்கப்பட்டேவந்தது. ஆனுல் தொடர்ந்து நடைபெறும் உள்நாட்டுப் போரினுல் இலங்கையின் கல்வித்தரத்தை சீரழித்து விட்டது கல்விமான்களில் பெரும்பாலானேர் நாட்டைவிட்டு வெளியேறியதால் இலங்கை பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறைகளுக்கும் பேராசிரியர்கள் இல்லாமல் திண்டாடுகின்றுர்கள். இதே போன்று நாட்டின் மற்றைய துறைகளின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வந்தவர்களுக்கும் நாட்டை விட்டுவெளியேறி விட்டதால் இலங்கை தற்

(5ம் பக்கம் பார்க்க)

வளமான வாழ்வு பெற — ஏர்க்களம் நாம் சென்றிடுவோம்

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு மண்றுளாடும் ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த உற்சவ 8 ஆம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சப்பறத் திருவிழா நடைபெறும். -154

0 0 0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் சர்வவோதய நிலைய அங்கத்துவப் பிள்ளைகளின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் மனனமுற்றேதல் நிகழ்வு நிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சர்வோதய இணைப்பாளர் திரு. கி. நடராசா தலைமையில் நடைபெறும். -154

0 0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மணவாளக்கோல உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் -154

0 0 0

யாழ்ப்பாணம்,

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. சிதம்பரநாதனின் நெறியாள்கையில் நாடக அரங்கக்கல்லூரி மாணவர்களின் 'நாமிருக்கும் நாடு நமது' நாடகம் இன்று சனிக்கிழமையும் நாளை 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியிலும் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

0 0 0

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபை 5ம் ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பி.ப 3-00 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இராமநாதன் நுண்கலைக்கழகத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்-162

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு இணுவில் அண்ணு சனசமூக நலனேன்பு மூலவள நிலையத்தில் படிப்பகம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு திரு. வ இரத்தினசிங்கம தலைமையில் இடம்பெறும்

இதில் பிரதமவிருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் கா. இந்திரன் படிப்பகத்தை திறந்து வைப்பார். -ர

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்இந்துக் கல்லூரி பிரதி அதிபர் செ. சிவராஜாவின் சேவை நலம் பாராட்டுவிழா இன்று சனிக்கிழமை பி. ப 3 00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு க. பரமேஸ்வரன் தலைமையில் இவ்விழா நடைபெறும். -162

0 0 0 0

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் நோயாளர் நலன்புரிச்சங்கத்தினல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செயலகம், மற்றும் உணவகம், பல் பொருள் விற்பனை நிலையம் என்பன இன்று 10ம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. 155 - 162

# தமிழீழவைப்பகத்தின் சேவை கிளிநொச்சிமக்களுக்கும் கிடைக்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வைப்பகத்தின் கிளை ஒன்று அண்மையில் கிளிநொச்சியில் திறக்கப்பட்டுள்ளது இது தமிழீழ வைப்பகம் தமிழர்களின் நம்பிக்கைக்குப்பாத்திரவாளியாக இருப்பதையும் அதன் நம்பகத்தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ வைப்பகம் தனது வாடிக்கையாளர்களுக்கு நிதி சம்பந்தமான பல சேவைகளை ஆற்றுகிறது. சேமிப்பு கணக்குச் சேவை, நடைமுறைக் கணக்குச் சேவை நிலையான வைப்பு முதலியனவற்றுடன் கடன் வாய்ப்புக்களையும் அடகுக்கு பணம் வழங்குவதும் நடைபெறுகிறது.

நிலையான வைப்புகளைப் பொறுத்தளவில் ஆகக் குறைந்தது ரூபா 2000/-த்தை நிலையான வைப்பில் இடலாம். இதற்கு ஆறுமாத, ஒருவருட இரண்டு வருட முதிர்வில் முறையே 15 வீதம், 16 வீதம் 17 5 வீதம் வட்டி வழங்கப்படுகிறது.

இதைவிட ரூபா 25,000/-க்குக் குறையாத எத்தொகையையும் வைப்புச செய்யும் வாய்ப்பும் ஏழுநாள் முன் அறிவித்தல் கொடுத்து பத்து வீத வட்டியுடன் மீளப்பெறலாம்.

பொருண்மிய அபிவிருத்தியை கருத்தில் கொண்டு மேம்பாட்டின் நோக்கத்தையும், பொறுப்பின் பெறுமதியையும் மதிப்பீடு செய்து மேம்பாட்டுக்கடன் என்ற கடனும் வைப்பகத்தால் வழங்கப்படுகிறது. இதற்கு 24 வீதம் முதல் 27 வீதம் வரை வட்டி அறவிடப்படுகிறது. வாணிபக்கடன்களும், நடைமுறைக் கணக்கில் மிகைப் பற்று வட்டியில் பெறும் வாய்ப்பும் உண்டு.

தமிழீழ வைப்பகத்தின் சேவை கிளிநொச்சிக்கும் எடுத்துச் செல்லப்பட்டது அங்குள்ள விவசாயிகளுக்கு பெரும் வாய்ப்புகளை அளிப்பதாய் அமையும். எங்கள் பணங்களை எம் நாட்டுக்குள் உள்ளோருக்கே பயனளிக்கும் வகையில் வைப்பகம் செயல்படுகிறது. அதன் சேவை இன்னும் பல இடங்களுக்கு விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது. சுன்னாகத்தில் ஒரு கிளை விரைவில் திறக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

---

மாணவரிடையே

## வணிக கல்வி அறிவை வளர்க்கும் போட்டிகள்

(உடுவில்)

பாடசாலை மாணவர்களிடையே வணிக கல்வியின் அறிவை வளர்க்கும் நோக்குடன் பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஆண்டு ஒன்பது மாணவரிடையே வணிக ஆக்கத்திறன் போட்டியும், ஆண்டு பத்து மாணவரிடையேகட்புலசாதன ஆக்கப்போட்டியும் ஆண்டு பதினொன்று மாணவரிடையே கட்டுரை போட்டியும் க. பொ. த. உயர்தரமாணவர் [1996] இடையே வணிகவியல் பாடத்திறன் எழுத்துப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் இப்போட்டிகளை இம்மாதம் 30ம் திகதிக்கு முன் நடத்தி மவரின் பெயரை தெரிவு செய்து ஜூலை 5ம் திகதிக்கு முன் கோட்டபணிப்பாளருக்கு அனுப்புமாறும், கோட்டமட்டத்திலான போட்டிகள் ஜூலை 12ம திகதி புதன் கிழமை ஒவ்வொரு கோட்டங்களிலும் நடைபெறும் எனவும், கோட்ட மட்டத்தில் ஒவ்வொருபிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட முதல் ஐந்து போட்டியாளர்களது ஆக்கங்கள் வலயமட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவில் இருந்தும் ஐந்து போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் கல்வி வலயம இரண்டிற்கானவணிககல்வி உதவிக்கல்விபணிப்பாளர் திரு. நா. வரசுரசா அறிவித்துளார்.-109

---

## "சூழல் சார்ந்த சட்டங்கள் வரையப்பட வேண்டும்"

(சாவகச்சேரி)

"நாங்கள் வன விலங்குகளாக வாழ முடியாது. சூழல் சார்ந்த சட்டதிட்டங்கள் எமது பிரதேசத்திற்கு வரையப்படவேண்டும். எம்மிடம் நிறைந்துள்ள வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற சூழல் பாதுகாப்புத்தினக் கருத்தரங்கில் உரையாற்றும்போது பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் அதிக வெட்பமோ, வெள்ளப் பெருக்கோ, பூமி நடுக்கமோ ஏற்படுவதில்லை: எம்மிடமுள்ள வளங்களை அழித்துவிடாமல் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளப் பழக வேண்டும்.

புவியியல் துறையைச் சேர்ந்த இரா. சிவச்சந்திரன் உரையாற்றுகையில் சூழல் மாசடைதல் என்பது உலகத்திற்கே உரியது. இவ்விடயத்தில் எல்லோரும் சேர்ந்து கைகோர்த்து நிற்கவேண்டும். இல்லை என்றால் உயிரினங்கள் அற்ற உலகம்தான் இருக்கும் மனிதன் தனது நலன் கருதியேனும் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்றார். 155 ரரி

---

## 'சீ-டான்ஸரின்' சிப்பந்திக்கு நஷ்டஈடு வழங்க முடிவு

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறைக்கு அருகில் 'சீ-டான்சர்' கப்பல் கடற்கண்ணியில் சிக்கிய சம்பவத்தின் போது காணாமற்போன அக்கப்பலின் சிப்பந்திக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நஷ்டஈடு வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளது.

இச்சிப்பந்தி இந்தோனேஷிய நாட்டைச் சேர்ந்தவராவர்.

சம்பவத்தை தொடர்ந்து அவரை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் பலனளிக்காததை தொடர்ந்து அவர் இறந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது.

இவருக்கான நஷ்டஈட்டை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்தோனேஷியாவில் வைத்து அவரின் குடும்பத்தினரிடம் கையளிப்பர். -கி

---

## சுகாதார பணியாளர்களுக்கு அனர்த்த தற்காப்பு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அனர்த்தங்கள் இடம்பெயர்வுகள் என்பவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றி யாழ். மாவட்ட வெளிக்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன்யாழ் மாநகராட்சிமன்ற சுகாதாரப்பகுதியினரால் இப்பயிற்சி நெறி நடாத்தப்படுகிறது.

எதிர்வரும் 14ம், 15ம், 16ம் திகதிகளில் யாழ் மாவட்ட வெளிக்கள சுகாதாரப் பணியாளருக்கு இப்பயிற்சி நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

பயிற்சியில்பங்குபற்ற விரும்பும் சுகாதாரப்பணியாளர்கள் பிராந்தியசுகாதார பணிமனையூடாகவோ தமது சுகாதார வைத்திய அதிகாரியூடாகவோ இம்மாதம் 12ம் திகதி மாலை 4 மணிக்கு மாநகராட்சிமன்றத்தில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் சிறுவர் பாதுகாப்புப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கி

---

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப 2. 30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. சாதனா பாடசாலையில் நடைபெறும்.

---

## 1090 பேருக்கு உதவித் தொகை

(யாழ்ப்பாணம்)

பொதுசன மாதாந்த உதவித் தொகையை 1090 பேர் யாழ். பிரதேச செயலக பிரிவில் பெற்று வருகின்றனர்

மாதம் ஒன்றுக்கு 1 28 660 ரூபா இவர்களுக்கென சமூக சேவைகள் பகுதியில் வழங்கப்படுவதாக யாழ். பிரதேச செயலக புள்ளி விபரக் கைநூலிலிருந்து தெரியவருகிறது. -170-சி

---

## ஓய்வூதிய வவுச்சர்கள் வருகின்றன

(கொழும்பு)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் 'ஹபரண' கப்பலில் எடுத்துவரப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமான ஏற்பாடுகளை கொழும்பில் தற்பொழுது தங்கியிருக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. பொன்னம்பலம் மேற்கொண்டுவருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

170-க-கி

---

காலி கடை எரிப்பு:

## தமிழ் வர்த்தகர்களுக்கு வங்கிக் கடன்

(கொழும்பு)

காலியில் அண்மையில் நடைபெற்ற இனவன்முறைகளின் போது பாதிப்புற்ற தமிழ் வர்த்தகர்களுக்கு வங்கிகடன் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

காலி வன்செயல்களின் போது தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

இவற்றின் பெறுமதிக்கு ஏற்ப வங்கிக் கடன்கள் வரையறுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. கி - சி

---

## இருட்டில் சென்றவரை தாக்கி பணம் பறிமுதல்

(ஆனைப்பந்தி)

இருட்டில் சென்றவரைத் தாக்கி விட்டு பணம் பறித்துச் சென்ற மற்றொரு சம்பவம் சென்ற செவ்வாய் இரவு இடம்பெற்றுள்ளது

யாழ் நகர்ப் பகுதியிலுள்ள சாப்பாட்டுக் கடையொன்றில் கடமையாற்றும் மயில்வாகனம் என்பவர் சம்பவ தினம் இரவு பத்து மணியளவில் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் ஓட்டுமடம் பகுதியில் வழி மறித்த சிலர் இவரை பலமாகத் தாக்கிவிட்டு சுமார் இருநூற்றைம்பது ரூபா பணத்தை பறித்துச் சென்றுள்ளனர். 101 - கி

---

## யாழ். செயலக தொலைபேசி பழுதடைந்த நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி கடந்த சில நாட்களாகப் பழுதடைந்திருப்பதாகவும் இதனால் செயலக கொழும்புக்கான தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இச்சேவை மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள அதிகாரிகள் கொழும்பிலுள்ள தமது தலைமை அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். தற்பொழுது இத்தொலைபேசி பழுதடைந்திருப்பதால் இவர்களின் கொழும்புக்கான தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -162 சி

---

## புறநிலைபடிப்புக்கள் அலகின் இரு கற்கை நெறிகள் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகபுறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் அலுவலக முகாமைத்துவம் அடிப்படைக் கற்கை நெறி தொகுதி 2இன் ஆரம்ப வைபவம் இன்று 10ம் திகதி சனிக்கிழமை பி.ப 2மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வாகனப் பொறியியல் அடிப்படைக்கற்கை நெறி தொகுதி 2இன் ஆரம்ப வைபவம் இன்று பி.ப 2.30 மணிக்கு வர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கற்கைநெறி பயில ஆர்வம் கொண்டோர் உடனடியாக புறநிலைப்படிப்புகள் அலகின் அலுவலகத்திற்கு வருகை தரும்படி இணைப்பாளர் கோருகின்றார். ரி

---

## வெப்பத்தால் பலியாவோர் தொகை அதிகரிப்பு

(புதுடில்லி)

வட இந்தியாவில் கடுமையான வெப்பத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

இந்தப் பகுதிகளில் கடும் வெப்பம் 44 பாகை தொடக்கம் 50 பாகை செல்சியஸ் வரை கடந்த இரண்டு வாரமாக நிலவுகிறது. ராஜஸ்தானில் கடந்த இரண்டு நாட்களாக 50 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது. அந்த பிரதேசத்தின் கடந்த மூன்று நாட்களாக நிலவிய 49. 5 பாகை செல்சியஸ் வெப்பத்திற்கு பல உயிர்கள் பலியாகியுள்ளன.

இதுவரை வெப்பத்திற்கு 110 பேர் பலியாகியதோடு ராஜஸ்தானில் மாத்திரம் 49 பேர் பலியாகினர் உத்தரப் பிரதேசத்தில் 25 பேரும் மகராஸ்ட்ராவில் 15 பேரும் ஒரிஸ்ஷாவில் 10 பேரும், மத்திய பிரதேசத்தில் இருவரும் என பரவலாக வெப்பத்தின் கொடுமைக்கு பலியாகி வருகிறார்கள்.

கடந்த 50 வருடங்களில் இந்தவகையாக நீண்ட நாட்களுக்கு நிலவாத கடுமையான வெப்பம் இப்போது நிலவி மக்களை கொடுமைப்படுத்துகிறது. கே - சி

---

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வரும் லீக் சுற்றுப் போட்டியின் 2 வது சுற்று ஆட்டங்கள் இன்று முதல் நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கும் ஆட்டங்களின் விபரம் வருமாறு: முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் எதிர்எவரெஸ்ட் கழகம், றோயல் எதிர் சென் றொக்ஸ், சென் நீக்கிலஸ் எதிர் பாடுமீன் மோதும். -வி

# ★ யாழ். ஆஸ்பத்திரியில் எக்ஸ்-றே எடுக்கும் நோயாளரின் தொகையும் மட்டுப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலை எக்ஸ்றேபிரிவும் எக்ஸ்றே எடுப்பதில் நோயாளரின் தொகையை மட்டுப்படுத்தியுள்ளது.

வாட்டுகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும். நோயாளர்களுக்கும் அவசரம் எனக் கருதப்படும் நோயாளர்களுக்கும் மாத்திரமே எக்ஸ்றே எடுக்கப்பட்டு வருகிறது. கிளினிக் மற்றும் ஏனைய நோயாளர்களுக்கு எக்ஸ்றே எடுப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள மின் சாரப்பாவனைக் கட்டுப்பாடு காரணமாகவும், எக்ஸ்றே 'பிலிம்கள்'' போதியளவு கையிருப்பில் இல்லாதிருப்பதினுலுமே எக்ஸ்றே எடுப்பதில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது போர்க்கால சூழ்நிலையில் அதிக எக்ஸ்றே பிலிம்கள் பாவனைக்கு தேவையானபோதிலும் இருக்கின்ற சொற்ப தொகை பிலிம்களை மிச்சப்படுத்தும் வகையிலேயே இம்முறைகைக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பிலிம்களே தற்போதய பாவனையிலுள்ளதாகவும் அதன் பின் இது வரையும் பிலிம் அனுப்பப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 90-சி

## யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மக்கள் வங்கி கடன் வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். விவசாயிகளுக்கு விவசாயக் கடன் திட்டத்தின் கீழ், மக்கள் வங்கி கடன் வசதிகளை வழங்கி வருவதாக யாழ். மாவட்ட மக்கள் வங்கி பிராந்தியமுகாமையாளர் அருளானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: சென்ற ஆண்டு யாழ். மாவட்டத்தில் நெல், உருளைக் கிழங்கு, வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட 3,000 விவசாயிகளுக்கு 30 மில்லியன் ரூபா கடனுக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கூட்டுக் கடன் வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கடன் திட்டம், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், சமூக சேவை அமைப்புக்கள் மூலமும் வழங்கப்பட்டு வருகின்றது என்ருர். 162 கி

## 5 – 14 வயதுச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வி பெறுவது கட்டாயமாக்கப்படுகிறது

(கொழும்பு)

ஐந்துவயதுக்கும் பதினுன்கு வயதுக்கு மிடைப்பட்ட சிறுவர்கள் ஆரம்பக்கல்வி பெறுவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. தற்போது இலங்கையில் பத்து வீதமான சிறுவர்கள் ஆரம்பக்கல்வியைப் பெறாதிருப்பது ஆய்வுகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளதைத் தொடர்ந்தே ஆரம்பக்கல்வியை கட்டாயமாக்க அரசு முடிவெடுத்திருக்கின்றது.

இப்புதிய சட்ட மூலம் அமுலுக்கு வரும் சந்தர்ப்பத்தில் இவ் வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களை வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலைக்கு அமர்த்துவது சட்ட விரோத நடவடிக்கையாகவே கருதப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலும் ஆரம்பக்கல்வி கட்டாயககல்வியாக பிரகடனப்படுத்தப் பட்டிருந்தமையும் பின்னர் அத்திட்டம் கைவிடப் பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கிசி

## இஸ்ரேலின் உதவியைப் பெறுவது முட்டாள்தனமான செயல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு இஸ்ரேலின் உதவியைப் பெறுவது ஒரு முட்டாள் தனமான செயல் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிததலைவருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாப் ரவூப் இஸ்ரேலின் உதவியைப் பெறுவதற்காக அரசை கண்டித்தார்.

இஸ்ரேலின் இராணுவத்தின உதவியை பெறுவல் அரசின் அங்கம் வகிக்கும் தமது முடிவை ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் மாற்றிக் கொள்ளுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அஷ்ரப் அண்மையில் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது- கி-சி

## அமெ. டொலர்களை கடத்திய வெளிநாட்டவர் மீது விசாரணை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 32 இலட்சம் அமெரிக்க டொலர்களை சட்டவிரோதமாக வெளிநாட்டிற்கு அனுப்பிய இரு பிலிப்பைன்ஸ் பெண்களுக்கும் ஒரு மலேசியருக்கும் எதிராக குற்றப் புலனுய்வு திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது,

கடந்த 13மாத காலத்தில் இவ்வாறு சட்டவிரோதமாக அமெரிக்க டொலர்கள் கடத்தப்பட்ட சம்பவம் குற்ற புலனுய்வு திணைக்களத்தின் துரித முயற்சியால் அம்பலத்திற்கு வந்துள்ளது. இச்சம்பவத்திஞல் பலஇலங்கையர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மூன்று சந்தேக நபர்களும் நாட்டைவிட்டு வெளியேருதவாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மூவரும் தமது கம்பனிகளின் கொழும்பு கிளையுடன் இணைந்து இம்மோசடியை புரிந்துள்ளதாகவும் 1993ம் நவம்பர் மாதம் தொடக்கம் 1994 டிசம்பர் வரை இம்மோசடி இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது- க-கி.சி

## புத்திஜீவிகள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போது ஒரு அறிவுலக வறுமையை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இதேநேரம் இலங்கையில் உள்ள உடல்வலிமை உள்ள தொழிலாளர்களும் தொழில் நுட்பவல்லுநர்களும் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்ருர்கள், இவ்வாருனவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இலங்கையில் தற்போது மலிந்துபோய் இருக்கும். தொழில் முகவர் நிலையங்களே முக்கிய காரணமாகும்.

இலங்கையின் இந்த அவல நிலை மேலும் நீடிக்காமல் இருக்கவேண்டுமாஞல் இலங்கையில் விரைவில். சமாதான முறையில் அமைதி ஏற்படவேண்டும் எனவும் கூறியுள்ளனர். வி-சி

## இராசி பலன்

10-06-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு வைகாசி-27]

துவாதசி பி. ப. 5.00 வரை சுவாதி மாலை 6 17 வரை அமிர்தசித்தயோகம். சனிப்பிரதோஷவிரதம் இராகு காலம் காலை 2.52 முதல் 10 22 வரை சுபவேளை மாலை 2 52 முதல் 4 22 வரை.

மேஷம்: தொழில் உறவு, பெரியார் ஆசி, பயணநன்மை

இடபம்: காரிய விக்கினம், குடும்பசுகம், நன்மதிப்பு.

மிதுனம்: வாய் தர்க்கம், அமைதிக்குறைவு, பணக்கஷ்டம்.

கடகம். நண்பர் குறை, தொழில் கஷ்டம், அலைச்சல்,

சிங்கம்; முயற்சி தாமதம், பணவரவு, அறிஞர் சந்திப்பு.

கன்னி: குடும்பபிரிவு, உடல் அசதி. இனசன விரோதம்.

துலாம்: பெற்ருேர் அறிவுரை, சுபகாரியம். தியானம்.

விருச்சிகம்: குழம்பித்தெளிதல், கடினவாக்கு, அகால உணவு.

தனுசு; புதிய சிந்தனை, வருவாய் அதிகரிப்பு, பணிவுடை.

மகரம்: சபையோர் பாராட்டு, தாயன்பு, புதிய முயற்சி.

கும்பம்: பிறர் வெறுப்பு, போட்டியில் துன்பம், வேறுபாடு.

மீனம்: தொழில் போராட்டம், உள்ளக்குமுறல், குடும்ப கவலை.

— ஜோஸ்யர்

## ஓய்வு பெற்ருர்

(அச்சுவேலி)

வலி - கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் க. ஆனந்த கிருஷ்ணன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.-74

## கௌரவிப்பு

[உடுவில்]

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகா ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பூர்த்தி விழாவின் போது பிரதம குருவாக விளங்கியசிவஸ்ரீ பரமசிவக் குருக்கள்' சமய சொற்பொழிவு நிகழ்த்திய த. சிவகுமாரன் தேவார இசைமணி தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தன் ஆகியோர் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். 109

## முதலுதவி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

போர்க்காலச் சூழலை கருத்தில் கொண்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, வலி வடக்கு பிரிவு. முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி வகுப்பு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பிக்கப்படும். 90-கி

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்-போதனு வைத்தியசாலையை சேர்ந்த ஐந்து சிற்றூழியர்கள் எழுதுவினைஞர் இரண்டு பீ தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாண பொதுசேவைகள் ஆணைக்குழுவால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் யாழ். போதனு வைத்திய சாலையை சேர்ந்த சிற்றூழியர்கள் பங்குபற்றினர் இதில் ஐந்து சிற்றூழியர்கள் எழுதுவினைஞர் ஏ தரத்தில் சித்தி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரிட்சை யாழ்- செயலகத்தில் நடைபெற்றது. 170-சி

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக் கல்லூரியின் 1994 ஆம் ஆண்டிற்கான ஆண்டிறுதிப் பரிட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் சகல தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 16 ஆம் திகதி தங்கள் பகுதித் தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிஅட்டைகளை சமர்பித்து உரிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்ப கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். 170-சி

## மாடு இடித்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மாட்டுக்குத் தண்ணீர் வைத்துவிட்டுத் திரும்பிய பெண்ணை அந்த மாடு பின்பக்கமாக இடித்துத் தாக்கியதில் அப்பெண் படுகாயமடைந்தார்.

பண்டத்தரிப்பில் நேற்று இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் புவனேந்திரம் பொன்னுபரணம் (35 வயது) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ்.போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90-கி

## புதிய சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கையின் புதிய சட்டமா அதிபராக முஸ்லீம் இனத்தவர் ஒருவர் பதவியேற்றுள்ளார்.

ஜனாப் ஷிப்லி அஸீஸ் என்பவரே புதிதாகசட்டமா அதிபராகப்பதவியேற்றுள்ளவராவார். (கி)

## மணவாளக் கோல விழா

[நெல்லியடி]

தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோலவிழா இன்று 10ம் திகதிசனிக்கிழமை நடைபெறவிருக்கிறது,

இரவு 7மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியாக கம்பவாரிதி திரு இ. ஜெயராஜிஞல் ''வாழ்வு மிகுந்து வரும்,, எனும் சமய சொற்பொழிவு இடம் பெறும். 160

## ஆத்திசூடி மனன முற்ருேதல் விழா

[கொழும்புத்துறை]

தொல்புரம் வடஇலங்கைச் சர்வோதய நிலைய மண்டபத்தில் சர்வோதய அங்கத்துவப் பிள்ளைகளின் 'ஆத்திசூடி கொன்றை வேந்தன்' வாகுண்டாம். மனன முற்ருேதல் நிகழ்வு விழா இன்று 10ஆம் திகதி 17ஆம் திகதி' 18ஆம் திகதிகளில் காலை 8-30 மணி தொடக்கம் இளைப்பாறிய அதிபர் நா. முருகையா தலைமையில் நடைபெறும். 154

## மெய்வல்லுநர் போட்டி

(உடுவில்)

நவாலி சென். பீற்றேர்ஸ் ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் திரு. சிறில் சுகந்தரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. 109

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

## புதிய அனுமதிகள் 1994/95 கல்வியாண்டு

1994/ 95 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டு இதுவரை பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் தங்கள் பதிவினை 1995-06-23 ற்கு முன்பாக மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். இத்திகதிக்கு முன்பு பதிவு செய்துகொள்ளாவிடின் அத்தகையோரின் பெயர்கள் வெற்றிடங்களாகக் கருதப்பட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிஞல் அவர்களுடைய இடங்களை அடுத்த பட்டியல மூலம் நிரப்பும் வண்ணம் கேட்கப்படும்.

பதிவாளர்

(ஏ-4993)

## ★தொலைபேசி துண்டிப்பினால்

# செயலக அத்தியாவசிய சேவை மூன்று நாட்களாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும் யாழ் செயலகத்திற்குமிடையிலான தொலைபேசி வசதி பலாலி இராணுவத்தினரால் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து செயலகத்தின் அத்தியாவசிய சேவைகள் கடந்த மூன்று நட்களாக பாதிக்கப்பட்டுள்ளன

கொழும்பில் தற்சமயம் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபருடன் செயலக அதிகாரிகள் தொடர்பு கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில தற்போது நிலவும் அத்தியாவசிய பிரச்னைகளை உடனுக்குடன் அரச அதிபருக்கு எடுத்துக்கூற முடியாத நிலையில் செயலக அதிகாரிகள் இருந்து வருகின்றனர்.

யாழ், மாவட்டத்திலுள்ள ஏனைய அரசாங்க திணைக்களை தலைவர்களும் கொழும்புடன் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

162-170-ரி

## நரோமா பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

ஜூன் மாதம் 3வது முறை 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்கு பதிவு செய்தவர்கள் இன்று 10ம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். செயலகத்தில் தங்கள் ஆசனங்களுக்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். -ரி

## ஆறு எம்.பி.களுக்குஎதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

அரச எம். பிக்கள் ஆறுபேருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' விற்கு ஆதரவாக திரு. பற்றிக் வீரக்கோன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த மனுவுக்கு ஆதரவாக இந்த ஆறுபேரும் வாக்களித்தனர்.

இந்த ஆறுபேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்சி 40 அரச எம். பிக்கள் அரகடம் கோரிக்கை விடுத்ததையடுத்தே மேற்படிநடவடிக்கை எடுககப்படவிருக்கிறது,

இந்த ஆறு எம். பி. க்களிடமும் ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பாக விளக்கம் கேட்டுள்ளார். ரி

## பிக்குகள் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

அனுராதபுரம் ரூவான் வெலிசாயாவகாரை பௌத்த குருமார், அரசாங்க அமைச்சர்கள் மற்றும் அமைப்புக்கள் பல இணைந்து இன்று சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

தீவிரவாத நடவடிக்கைகளை ஒழிக்கவேண்டுமெனக் கோரியே இவர்கள் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளவுள்ளனர். -ரி

# மரணதண்டனை முறை மீண்டும் நடைமுறைபடுத்த தீர்மானம்!

(கொழும்பு)

மரணதண்டனை முறையை மீண்டும் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று கோரும் பிரேரணையை நேற்று நாடாளுமன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொணடது

மரணதண்டணையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற பிரேரணையை கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிரேமச்சந்திரா நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றினர்.

மரண தண்டனை நிறைவேற்றப்படாததினாலேயே இலங்கையில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. குறிப்பாக போதைவஸ்துக் கடத்தல்காரர்களால் இளம் சந்ததியினர் பாழடைந்து வருகின்றார்கள். முஸலிம் நாடுகளில் மரணதணடனைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படுவதனாலேயேஅங்கு குற்றச் செயல்கள் பெரிதும் குறைந்துள்ளன.

மேற்படி பிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் ஆதரித்து உரையாற்றினார்கள். -வி-ரி

## சிங்களக் குடியேற்றங்களின் பாதுகாப்பை அதிகரிக்கவும்

### ஐ. தே. க. எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கிலுள்ள சிங்கள குடியேற்றங்களுக்கு பாதுகாப்பை மேலும் பலப்படுத்திக் கொள்ளுமாறு ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியையும், இராணுவத் தளபதியையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது குடியேற்றத் திட்டங்களிலுள்ள சிங்கள மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தவே சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்குப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு அந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார். ம-ரி

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்படடுள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து ஒட்சிசன் சிலிண்டர்கள் வந்து சேராததால் கையிருப்பிலிருக்கும் ஒட்சிசன் சிலிண்டர்கள் முடியும் தறுவாயிலிருப்பதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -170-சி

உயரப் பறக்கும் பருந்துக்கு
கோழிக் குஞ்சே
குறியாகும்!
தெருவிற் சுற்றும் உளவாளிக்கு
தேடும் உளவே
குறியாகும்!

## தலைநகரில் மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பெருந்திரளான மக்கள் வீடு செல்வதற்காக பஸ்சுக்கு காத்திருந்தனர். வெடிச்சத்தம் கேட்டதும் மக்கள் கிலிகொண்டு நாலாபுறமும் கூச்சலிட்டவண்ணம் ஓடினார்களென்றும் புறக்கோட்டைப் பகுதியில் உள்ள பெரும்பாலான கடைகல் உடனடியாக மூடப்பட்டதாகவும் தெரிவக்கப்படுகிறது,

கொழும்பில் இவ்வாரத்தில் இடம்பெற்ற மூன்றுவது குண்டுவெடிப புச்சம்பவம் இதுவாகும். இக்குணடுவெடிப்புச் சம்பவங்களால் கொழும்பில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வி ரி

## செஞ்சிலுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

"சர்வதேச செஞ்சி லுவைச் சங்கத்தின் கப்பல்களைப் பாதுகாப்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பு தகுந்த கவனமெடுக்கும்'' என்று தலைவர் பிரபாகரன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிய தமது கடிதத்தில் குறிபபிட்டதாக வெரித்தாஸ் அறிவித்தது. வி ரி

## படைமுகாமில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வேவுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வடபகுதி முகாம்களிலுள்ள படை வீரர்கள் விரக்தியுற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு செல்ல முடியாதிருக்கிறது ங்களுக்கான விநியோகங்களில் பெருமளவு தடைப்பட்டிருப்பதனல் அவர்கள் மனோரீதியான நெருக்குதலுக்குள்ளாகியிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. ரி

## 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

1995ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஆண்டு 5 புலமைப்பரிசில்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடைய அனைத்து மாணவர்களின் விண்ணப்பங்களையும் அனுப்பிவைக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் லம் அறிவித்துள்ளார்.

மூடிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மேற்படிபரீட்சைக்கு சில மாணவர்களை அனுப்புவதில்லையென்று சில பாடசாலை அதிபர்கள் முடிவு செய்திருப்பதாக அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளது, அதிபர்களின் இந்த முடிவு மாணவர்களின் உரிமைகளுக்கு பங்கம் விளைவிப்பதாகவும் இருக்குமென்று மேற்படி செயலாளர் தமது சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். வி-ரி

## சந்திப்பு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இற்றைவரைதொழில் பெறுதவர்களை மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் 12ம் திகதி காலை 6 மணிக்குயாழ். இந்துக் கல்லூரியில் சந்திக்க விரும்புகின்றார்

## நரோமா சேவை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நரோமா பயணிகள் கப்பல் சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப் பட்டது.

இக்கப்பலின் இயந்திரங்கள் பழுதடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதினால் எதிர் வரும் திங்கடகிழமை திருமலையிலிருந்து புறப்படவிருந்த மேற்படி கப்பலின் சேவை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. விரி

## புலிகளின் மிதிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ சிப்பாய் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்குண்டதில் தமது காலை இழந்துள்ளார்.

இதேவேளை ஆயத்தியமலையில் இரு இராணுவ சிப்பாய்கள் மிதிவெடியில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளனர். க

## சூட்டுக்காயங்களுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. இச்சடலம் தற்போது ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் ஏற்கனவே உரிமைகோரப்படாத ஆறு சடலங்கள் பல பல நாட்களாக இருப்பது குறிந்பிடத்தக்கது. -ரி

## வடபகுதி இராணுவ

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இதேவேளை பல ஆயிரக்கணக்கில் இராணுவ துருப்புகள் பங்குபற்றவுள்ள இப படையெடுப்பு நிகழ்வில் பின்னணிப் புலமாக அனுராதபுரம் தளம் பயன்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து இராணுவ உத்தரவுகளை பிறப்பிப்பதை விட யுத்தம் நடைபெறவுள்ள வடபகுதிக்கு அண்மித்ததாக உள்ள அனுராதபுரத்திலிருந்து உத்தரவுகளை துரிதமாக வழங்கக்கூடும் என இராணுவ தளபதிகள் பலர் சுட்டிக்காட்டியததையடுத்தே அனுராதபுரத்தை தளமாகப பயன்படுத்தவுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. -க-ரி

## பாதுகாப்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜனாதிபதியின் இல்லம் வழியாகச் செல்லும் வீதி மூடப்பட்டு ஏற்கனவே உள்ள வாகன போக்குவரத்து நெரிசல் தீவிரமாகியுள்ளது.

சந்தேகப்படும்படியான வாகனங்களையும் கொழும்பு நகருக்கு வெளியே இருந்து வரும் தமிழர்கள் தங்கும் விடுதிகளையும் பாதுகாப்புப் படையினர் துருவித்துருவி விசாரணை, தேடுதல் நடத்தி வருகிறார்கள். இதனால் வழமையான வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பி. பி. ஸி: தெரிவித்தது. -ரி

## படைக்கு ஆட்சேர்ப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவனம் செலுத்துவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும்ஏற்பட்டுள்ள மோதல்களில் தினமும் பல இராணுவத்தினர் இறக்கின்றனர், பல இராணுவத்தினர் ஊனமடைகின்றனர். விடுதலைப்புலிகளின் தாககுதல்களுக்கு அஞ்சி இராணுவத்தைவிட்டுஆயிரக்கணக்கான படையினர் தப்பியோடுகின்றனர். இராணுவ சேவையிலிருந்து ஒய்வு பெறுவதற்காக தினமும் பலஇராணுவத்தினர் விண்ணப்பித்தவண்ணமிருக்கின்றனர்.

இராணுவத்தினரின் ஆட்பலம் மிகவும் குறைந்து வருவதினாலேயே இராணுவத்துக்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பதில் பாதுகாப்பு அமைச்சு முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது.

இதனாலேதான் இராணுவத்தை விட்டு ஓடிய 24 ஆயிரம் இராணுவத்தினருக்குப் பொதுமன்னிப்பு அளிப்பதற்கு இலங்கைஅரசு முடிவுசெய்துள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன, வி-ரி

## இந்திய அமைச்சரவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பியவுடன் இப் பதவியேற்பு வைபவம் இடம் பெறவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுசிறது.

இந்திய மத்திய அமைச்சரவையில் தற்போது 57 பேர் இடம்பெற்றுள்ளதும் இதில் 18 பேர் கபினெட் அந்தஸ்து பெற்றவர்கள் என்றும். 11 தனிப்பொறுப்பு வகிக்கும் இணை அமைச்சர்களாகவும், 25 பேர் இணை அமைச்சாகளாகவும், 03 பேர் துணை அமைச்சர்களாகவும் கடமை புரிகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

ஐந்துபுதுமுகங்கள் அமைச்சரவையில் இடம்பெறக்கூடும் என்றும் பழையவர்கள் நீக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேரள முன்னாள் முதல்வர் கே. கருணாகரனுக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்படக்கூடும் என்றும் சில இளம் அமைச்சர்கள் பலர் அமைச்சராக பதவி உயர்த்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உள்துறை இணை அமைச்சராக ராஜேஸ் வைலட்டும், வர்த்தக அமைச்சராக ப, சிதம்பரமும் நியமிக்கப்படக்கூடும் என்றும் புதுடில்லி அரசியல் வட்டசரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளது. க-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 163ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number R/1683613.